# வருடாந்த அறிக்கை
# 2021

SRI LANKA ACCREDITATION BOARD

# இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை

## வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

அங்கத்துவம் :

APLAC
Asia Pacific Laboratory Accreditation Cooperation

ilac

INTERNATIONAL ACCREDITATION FORUM IAF

# உள்ளடக்க அட்டவணை

பக்க
இலக்கம்


தலைவரினது செய்தி II

நிறைவேற்று அடிப்படையிலான தொகுப்பு IV

1. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை தொடர்பான அறிமுகம் 1
   1.1. தரம் சம்பந்தமான கொள்கை, பாரபட்சமற்ற கொள்கை, தொலை நோக்கு, இலக்கு மற்றும் முக்கிய விடயங்கள் 2
   1.2. இலக்குகள், நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் 5
   1.3. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினது செயற்பாடுகள 8

2. ஆளுநர் சபை 9

3. சட்ட ரீதியான குழுக்கள் 10
   3.1. கணக்காய்வுக் குழு 10

4. செயற்பாடுகளின் முகாமைத்துவம் 11
   4.1. மானிட வளங்கள் 11
   4.2. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை பணிக் குழு 11

5. செயலாற்றுகை சிறப்பமிசங்கள் - 2021 12
   5.1. ஒத்தியல்பு தராதர சேவைகள் 12
   5.2. பயிற்சி நிகழ்ச்சிகள் 12
   5.3. சர்வதேச நிகழ்வுகளில் பங்கேற்பு 12

6. நிதி சார்ந்த தகவல்கள் - 2021 14
   6.1. நிதித் துறையின் முக்கிய அம்சங்கள்
   6.2. 2021 டிசம்பர் 31 இல் உள்ளவாரான நிதி நிலைமைக் கூற்று 15
   6.3. 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி செயலாற்றுகைக் கூற்று 17
   6.4. நிகர் சொத்துக்கள்/பங்குகள் தொடர்பான கூற்று 18
   6.5. 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதியோட்டக் கூற்று 20
   6.6. நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 22


**இணைப்புகள்**


**இணைப்பு 01** - நிறுவனக் கட்டமைப்பு 47

**இணைப்பு 02** - செயற்படுத்துகைக் கட்டமைப்பு 48

**இணைப்பு 03** - 2021 டிசம்பர் 31 இல் உள்ளவாரான பணிக் குழு விபரங்கள் 49

**இணைப்பு 04** - பணிக் குழுவிற்கான பயிற்சிகள் - 2021 51

**இணைப்பு 05** - 2021 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 52

# தலைவரினது செய்தி



இந்த செய்தியை 2021 ஆம் ஆண்டு வருடாந்த அறிக்கைக்கும் முன் வைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் (SLAB) ஆணை, ஆய்வகங்கள், சான்றிதழ் அமைப்புகள் மற்றும் ஆய்வுகள், மற்றும் சர்வதேச வர்த்தகம் ஆகியன தேசிய தரக் கொள்கைக்கு இணங்க அங்கீகார நடவடிக்கைகளை ஊக்குவித்தல், சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உள் நாட்டு அங்கீகார நடைமுறைகளில் திறமையை உறுதி செய்தல் மற்றும் எளிதாக்குதல் போன்ற இணக்க மதிப்பீட்டு அமைப்புகளுக்கு அங்கீகாரம் வழங்குவதாகவும் காணப்படுகின்றது.

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் முக்கிய பங்காளிகளின் சர்வதேச வர்த்தகத்தை மேம்படுத்துவதிலும், ஆரோக்கியமற்ற மற்றும் அபாயகரமான பொருட்கள் மற்றும் சேவைகளிலிருந்து உள்நாட்டு நுகர்வோரைப் பாதுகாப்பதிலும் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை முக்கிய பங்கு வகிக்கின்றது. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை மற்றும் சர்வதேச அங்கீகார மன்றம் (IAF) ஆகியவற்றில் உறுப்பினராக செயற் பட்ட வண்ணமிருப்பதால், இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை வழங்கிய அங்கீகாரம் தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2020 இன் தொடக்கத்தில், கொவிட் தொற்று நோய் பெருமளவில் பரவத் தொடங்கியது, ஆனால் COVID-19 காரணமாக ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி மற்றும் அதன் தாக்கங்கள் எமக்கும் பெருமளவில் தாக்கத்தை எற்படுத்தியுள்ளது. 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நாட்டில் சமூக - பொருளாதார ரீதியாக ஏற்பட்ட விளைவுகள் மற்றும் அதன் கீழான நேரடி விளைவுகள் மற்றும் எஞ்சிய விளைவுகளுக்கு நாம் பெருமளவில் முகங் கொடுத்துள்ளோம். மேலும் உலகெங்கிலும் உள்ள வர்த்தக செயற்பாடுகள் தொடர்பிலும் நாம் பங்களிப்பை வழங்கியுள்ளோம். இருப்பினும், இந்த முன்னோடியில்லாத சவால்களுக்கு இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் பங்களிப்பு மிகவும் சிறப்பாகக் காணப்பட்டது. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை தனது பணிகளை முன்னெடுப்பதற்கான புதிய வழி முறைகள் தொடர்பில் குறிப்பிடத்தக்க மீள் தன்மை மற்றும் வளத்தை அது வெளிப்படுத்தியது. IAF இன் தேவைகளுக்கு இணங்கும் போது, மதிப்பீடுகளை டிஜிட்டல் மயமாக்கி, நேர் மறையான விளைவுகளை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டமையால், வீடுகளிலிருந்தே பணியாற்றும் செயற்பாடுகளுக்கு பங்களிப்பை வழங்கக் கூடிய வகையில் தொடர்ந்தும் பணியாற்றி வருகின்றோம். கணிக்க முடியாத எதிர்க் காலத்தை நோக்கி இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை டிஜிட்டல் மயமானதாக தேவையான உட கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கும், மெய் நிகர் மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கும் மற்றும் புதிதாக தராதர அங்கீகார இயைபாக்கங்களுக்கு ஏற்ப தனது பணியாளர்களை மாற்றியமைப்பதற்கும் அது தனது முதலீடுகளை முன்னெடுத்துள்ளது. இச் செயற்பாடு இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை இதுவரை முன்னெடுத்த சிறந்த மற்றும் கடினமான முடிவுகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. .

நாட்டின் தொற்று நோய் மற்றும் பொருளாதார வீழ்ச்சிக்கு எதிராகப் போராடுவதற்கான அதன் நவீன அணுகு முறைகளுடன் தராதர அங்கீகார மதிப்பீடுகளை நடத்துதல் மற்றும் அங்கீகாரம் வழங்குதல் மற்றும் இணக்க மதிப்பீட்டு அமைப்புகள் மற்றும் தொழிற் துறைக்கான பயிற்சித் திட்டங்களை நடாத்துதல் ஆகிய முக்கிய செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை அதன் செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுக்கக் கூடிய வாய்ப்பு கிடைத்தது.

அனைத்து நடவடிக்கைகளின் வெற்றியையும் உறுதி செய்து, இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை அதன் பங்காளிகளுக்கு தங்கள் வழிகாட்டுதல் கரத்தை நீட்டிய அனைத்து சபை உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவிக்க இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்கின்றேன். 2020/21 நிதியாண்டை நாங்கள் எத்தகைய அடிப்படையில் வெற்றிகரமாக அடைந்துள்ளோம் எனும் விடயம் தொடர்பில் கவனிக்கையில், மீண்டெழ முடியாமல் உலகம் முழுதுமுள்ள பல வணிகங்கள் தொற்று நோயினால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், எமது நிறுவனத்தினது பணப் புழக்கங்களை சமப்படுத்த முடிந்துள்ளது. தலைவர் எனும் அடிப்படையில், இச் சவாலான ஆண்டில் எங்களது பாராட்டத் தக்க செயற் திறனைக் கண்டு நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

குறித்த வருடத்தின் ஆரம்ப மாத காலப் பகுதியில் எண்ணியவாறு நேர் மறையாகவும், வலுவாகவும் வருட காலப் பகுதியின் பணிகளை நிறைவு செய்வதில் ஊழியர்களினது மகத்தான ஆதரவு, அர்ப்பணிப்பு மற்றும் வழங்கிய ஒத்துழைப்பு தொடர்பில் பணிப்பாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் அங்கத்தவர்கள் மற்றும் எமது அனைத்து பங்காளிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி சம்பத் வஹல**
தலைவர்

## பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரியினது நிறைவேற்று அடிப்படையிலான தொகுப்பு



கொவிட் தொற்று நோய் காரணமாக ஏற்பட்ட சிரமங்களுக்கு மத்தியிலும் நிறுவனத்தின் முக்கிய சேவைகளின் தடையற்ற செயற் பாட்டை பராமரிக்கும் பொருட்டு, சேவை வழங்கல் பொறி முறையில் தேவையான மாற்றங்களை இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை மேலும் நிறுவியுள்ளது. அதன் அங்கீகார சேவைகளை நிகழ் நிலை மற்றும் கலப்பின மதிப்பீடுகளாகப் பராமரிப்பதன் மூலமும், பயிற்சித் திட்டங்களை நிகழ் நிலை பயிற்சிகளின் வாயிலாக நடாத்துவதன் மூலமும் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை 2021 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடையக் கூடிய வாய்ப்பை பெற்றது. பல்வேறு பங்குதாரர்களிடையே அங்கீகாரத்தை மேம்படுத்துதல், செயலில் ஈடுபாடு உள்ளிட்ட பிற முக்கிய உந்துதல் வகுதிகளின் கீழ் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளின் அங்கீகரிப்பில் கட்டுப்பாட்டாளர்கள், பணியாளர்களின் திறன் மேம்பாடு மற்றும் சாதகமான பணிச் சூழலில் சிறப்பு கவனம் செலுத்தி நிறுவன திறனை வலுப்படுத்துதல், நிதி மற்றும் சுற்றுச் சூழல் நிலைத் தன்மையை உறுதி செய்தல், சீரான செயற்பாடுகள் போன்றவற்றின் மூலம் அங்கீகாரத்திற்கான சர்வதேச அங்கீகாரத்தை பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகிய செயற்பாடுகள் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை ஊழியர்களின் பங்களிப்புடனும், இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை மதிப்பீட்டாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களின் பங்களிப்புடனும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டன.

நாட்டில் நிலவும் சுகாதார வழிகாட்டுதல்களுக்கு இணங்க குறைந்த எண்ணிக்கையிலான பங்குதாரர்களின் பங்கேற்புடன் "நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் தேசிய அர்ப்பணிப்புகள் - அங்கீகாரத்தின் பங்கு" என்ற தொனிப் பொருளின் கீழ் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை உலக அங்கீகார தின நிகழ்வை 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வெற்றிகரமாக ஏற்பாடு செய்து நடத்தியது. இந் நிகழ்வு "SDGs தேசிய அர்ப்பணிப்பு மற்றும் அங்கீகாரம்" பற்றிய மெய் நிகர் மன்றத்தைத் தொடர்ந்து நிகழ் நிலை தேசிய பயிற்சியகமாக நடாத்தியது. மேலும் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை, SDG கள் மற்றும் அங்கீகாரம் பற்றிய சுவரொட்டி போட்டியை நடத்தியது. மேலும் "SDG களை அடைவதில் அங்கீகாரத்தின் பங்கு" மற்றும் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை ஊக்குவிப்பு கையேடு எனும் தலைப்பின் கீழ் அது தனது மின் செய்தி மடலை வெளியிட்டது.

வரையறுக்கப்பட்ட இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை ஊழியர்கள் மற்றும் வெளிப் புற மதிப்பீட்டாளர்களின் பங்களிப்புடன் APAC வழங்கிய வழிகாட்டுதல்களின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட தொலை நிலை/கலப்பின மதிப்பீடுகளாக பெரும்பாலான இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை மதிப்பீடுகளை வெற்றிகரமாக நடாத்தியது. இதன் விளைவாக, 4 பரிசோதனை ஆய்வு கூடங்கள், 3 சான்றிதழ் அமைப்புகள் (தயாரிப்பு, நபர்), 2 மருத்துவ ஆய்வு கூடங்கள், 2 திறன் சோதனை வழங்குநர்கள் மற்றும் 2 GHG சரி பார்ப்பு மற்றும் செம்மைப்படுத்துகை அமைப்புகளை உள்ளடக்கிய 13 புதிய இணக்க மதிப்பீட்டு அமைப்புகளுக்கு இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை அங்கீகாரத்தை வழங்கக் கூடிய வாய்ப்பை பெற்றது. பெருமளவில், பல அளவுருக்களை உள்ளடக்கிய 14 நோக்க நீட்டிப்புகள் ஏற்கனவே அங்கீகாரம் பெற்ற இணக்க மதிப்பீட்டு அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதன் வாயிலாக உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தராதர இணக்க மதிப்பீடுகள் பற்றிய அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

தொழிற் துறையை பயிற்றுவிப்பதற்கான இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் பொறுப்புகளில் ஒன்றான, இணக்க மதிப்பீட்டு அமைப்புகளுடன் இணைந்து, இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினால் இயக்கப்படுகின்ற நடப்பு அங்கீகாரத் திட்டங்களில் பெரும்பாலானவை உள்ளடக்கிய 17 பயிற்சித் திட்டங்களை இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை நடாத்தியுள்ளது. இது தவிர, நாட்டினுள் அங்கீகார தராதரத்தை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை இந் நிறுவனம் வழங்கியுள்ளது. பெருமளவில் நிறுவனத்தினதும், குழுவினதும் உறுப்பினர்கள், மதிப்பீட்டாளர்கள் மற்றும் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை ஊழியர்களுக்கு அங்கீகாரம் வழங்கும் நடவடிக்கைகள் தொடர்பாக அவ் ஊழியர்களினது திறன்கள் மற்றும் விதி முறைகளை மேம்படுத்துவதற்குத் தேவையான

பயிற்சியை வழங்கிய வண்ணமுள்ளது. 2021 ஆம் ஆண்டில், இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை 4 உதவி இயக்குநர்களை APAC தொடர்பில் நியமித்ததுடன், அவர்களை சக மதிப்பீட்டாளர்களாகவும் பயிற்றுவித்தது.

SDG கள் மற்றும் தேசிய கொள்கை கட்டமைப்புடன் இணக்கமாக, இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை தொழில் நுட்ப விதி முறைகளை செயற்படுத்துவதில் பயன்படுத்தக் கூடிய அங்கீகாரம் பெற்ற தராதர இணக்க மதிப்பீட்டு சேவைகளின் கீழ் பொருத்தமான மாதிரிகளை அடையாளம் காணும் பொருட்டு அத தரப்பினருக்கு உதவுவதற்கும், ஆதரவளிப்பதற்கும் முக்கிய ஒழுக்காற்று முறை நிறுவனங்களுடன் தொடர்ந்து பணியாற்றிய வண்ணமுள்ளது.

சர்வதேச அங்கீகாரத்தைப் பேணுதல் மற்றும் இணக்க மதிப்பீட்டு அமைப்புகளுக்கு சர்வதேச அங்கீகாரம் பெற்ற அங்கீகாரச் சேவைகளை வழங்குதல் தொடர்பான அனைத்து இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை செயற்பாடுகளும் ISO/IEC 17011 (இணக்க மதிப்பீடு: அங்கீகாரம் பெற்ற அமைப்புகளுக்காக பொதுவான தேவைகள் அங்கீகாரம் பெற்ற இணக்க மதிப்பீட்டு அமைப்புகளுக்கு) இணங்கக் கூடியவாறு தமது பணிகளை முன்னெடுத்துள்ளது. தேசிய தராதர உட கட்டமைப்பில் (NQI), இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை 2021 ஆம் ஆண்டில் சர்வதேச வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கும், சோதனை, அளவுத் திருத்தம், ஆராய்ச்சிகள் போன்ற துறைகள் தொடர்பில் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட அங்கீகாரச் சேவைகளை வழங்குவதன் மூலம் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பயன்படுத்துபவர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் சான்றிதழ்கள் மற்றும் அங்கீகார செயற்பாடுகள் போன்றவற்றை முன்னெடுத்த வண்ணமுள்ளது.

2021 ஆம் ஆண்டில் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை அதன் சேவை வழங்கலின் செயற் திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் அதன் பணிப்பாய்வுகளை டிஜிட்டல் மயமாக்கும் செயற்பாட்டை ஆரம்பித்தது. மேலும் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை தனது சேவைகளின் வாயிலாக டிஜிட்டல் மயமாக்கல் மனித வள பற்றாக்குறையின் நிலவும் சவாலை சமாளிப்பதற்கு இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை உதவியை வழங்குமென கருதப்படுகின்றது.

2020 ஆம் ஆண்டில் தராதர அங்கீகார சபையின் மொத்த வருமானம் இலங்கை ரூபா 36.98 மில்லியனாகக் காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட வருமானம் இலங்கை ரூபா 49.35 மில்லியனாகக் காணப்பட்டது. இதன் வாயிலாக 2021 ஆம் ஆண்டில் இலங்கை ரூபா 12.37 மில்லியன் நிதி வருமானத்தை இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை மேலதிகமாக ஈட்டியுள்ளது. 2021 ஆம் ஆண்டில், இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை 90% ஆன தொடர் செலவின விகிதத்தை விட வருமான விகிதத்தை அடைந்து கொள்ளக் கூடிய வாய்ப்பை பெற்றது.

**சந்திரிக்கா திலகரத்ன**
பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி
இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை

# 1. அறிமுகம்

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை (SLAB), தேசிய தராதர அங்கீகாரத்திற்கான சட்ட வரைவு கட்டமைப்பைத் தன்னகத்தே கொண்டிருப்பதுடன், 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் கீழ் நிலை நாட்டப்பட்ட ஒரு நிறுவனமாகவும் காணப்படுகின்றது. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை, வர்த்தக அமைச்சின் கீழ் செயற்பட்ட வண்ணமிருந்ததுடன், இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை சட்டத்தின் பிரகாரம் சபைக்கென பதின் மூன்று (13) அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டனர். அமைச்சர் சபையின் ஒரு அங்கத்தவரை தலைவராக நியமிப்பார். பணிப்பாளர், சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரியாகச் செயற்படுவதுடன், அவர் ஆளுகைச் சபையின் செயலாளராகவும் செயற்படுகின்றார்.

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைகளுக்கான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான இணக்க மதிப்பீடுகளை எளிதாக்குவதற்கும், அங்கீகார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும் தேவையான அங்கீகார சேவைகளை வழங்குதல் சபையினது பொறுப்பாகக் காணப்படுகின்றது. குறிப்பாக அங்கீகார சேவைகளின் கீழ் பரிசோதனை / மருத்துவம் / அளவுத் திருத்த ஆய்வகங்கள், கட்டமைப்பு / உற்பத்தி / தனி நபர்கள் சான்றிதழ் அமைப்புகள், ஆராய்ச்சி நிறுவனங்கள், GHG உறுதிப்படுத்தல் மற்றும் சரிபார்ப்பு அமைப்புகள், தொழில், வணிக சமூகம், நுகர்வோருக்கு குறிப்பிட்ட சேவைகளை வழங்கும் திறன் சோதனை வழங்குநர்கள் மற்றும் சிறந்த ஆய்வு கூடப் பயிற்சி போன்ற விடயங்கள் உள்ளடங்குகின்றன. மேலும் இலங்கை தராதர அங்கீகார சபை இலங்கை அரசுடன் கூட்டாக இலங்கை தராதர அங்கீகார சபையினது 2005 ஆம் ஆண்டின் சட்ட இலக்கம் 32 இன் ஒப்புதலுடன் 2005 செப்டம்பர் 23 ஆம் திகதி தனது செயற்பாடுகளை ஆரம்பித்தது. இது தராதர வழங்கல் நிறுவனமாக ISO/IEC 17011 (இணக்க மதிப்பீட்டு அமைப்புகளுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கான அங்கீகார அமைப்புகளுக்கான தேவைகள்)) பரஸ்பர அங்கீகார ஏற்பாடு (ILAC MRA), சர்வதேச அங்கீகார மன்றத்தின் பல் தொகுதி இணக்கப்பாடு (IAF MLA) மற்றும் ஆசிய பசுபிக் பரஸ்பர அங்கீகார ஒத்துழைப்பு அமைப்பு (APAC MRA) போன்ற நிறுவனங்களுடன் கூட்டாக அதனது வாடிக்கையாளர்களுக்கும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட அங்கீகார சேவைகளை வழங்கிய வண்ணம் செயற்படுகின்றது.

## 1.1.தரம் சம்பந்தமான கொள்கை, பாரபட்சமற்ற கொள்கை, தொலை நோக்கு, இலக்கு மற்றும் முக்கிய விடயங்கள்

### தரம் சம்பந்தமான கொள்கை

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை என்பது உயர் மட்ட நேர்மை, திறமை, பயன்பாடு என்பனவற்றின் உச்ச கட்ட நிலையில் தராதர அங்கீகாரத்தை வழங்குவதில் அர்ப்பணிப்புடன் பணி புரியும் சேவை வழங்கும் ஸ்தாபனமாகும்.

வாடிக்கையாளர்கள், ஏனைய பங்காளிகள், வர்த்தகத் துறையினர் ஆகியோரின் மாற்றமடைந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதே சமயத்தில், ISO/IEC 17011, ஏனைய தொடர்புடைய சர்வதேச தரங்கள் மற்றும் கொள்கைகளுக்கு உட்பட்ட வகையில் தராதர அங்கீகாரச் சேவைகளை வழங்குவதில் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை அர்ப்பணிப்புடன் பணிபுரிகின்றது. சர்வதேச அங்கீகாரத்தை மேம்படச் செய்வதற்கென சர்வதேச நிறுவனங்களின் கடமைகளில் திறமையாகவும், செயற் திறன் மிக்கதாகவும் முன்னெடுப்பதற்கு இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை தயாராகவுள்ளது.

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் நடவடிக்கைகளில் உச்ச கட்ட தொழில் திறனுடனான பங்களிப்பை வழங்குவதற்கென சேவையாளர்களும், மதிப்பீட்டாளர்களும் அவர்களது தகைமைகளைத் தொடர்ச்சியாக தரமுயர்த்துவதற்கான சூழலை இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை வழங்குகின்றது.

ஒத்தியல்பு மதிப்பீடு மற்றும் தராதர அங்கீகாரம் என்பனவற்றின் செயற்பாடுகளையும், தேவைகளையும், சூழல் கோரிக்கைகளையும் தொடர்ச்சியாக மீளாய்வு செய்வதோடு, இவற்றில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கென பொருத்தமான மாற்றங்களை இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை பூர்த்தி செய்கின்றது.

**பாரபட்சமற்ற கொள்கை**

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் பிரதான நோக்கம், 2005 ஆம் ஆண்டின் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை சட்ட இலக்கம் 32 இன் கீழ் நிறுவப்பட்டுள்ள நோக்கத்தின் பொருட்டு இலங்கை அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதாகக் காணப்படுகின்றது. இதன் கீழ் அங்கீகாரம் தொடர்பான ஒட்டு மொத்த கொள்கைகளையும், உத்திகளையும் பாரபட்சமின்றி முன்னெடுக்க வேண்டியுள்ளது. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் நடப்பு நிர்வாகக் குழுவின் கீழ், கொள்கை மற்றும் மூலோபாயத்தை உருவாக்கும் செயற்பாட்டில் அனைத்து பங்குதாரர்களின் பங்கேற்புக்கான சாத்தியம் உறுதி செய்யப்பட்டு, அவை பாரபட்சமற்ற முறையில் செயற்படுத்தப்பட்ட வண்ணமுள்ளன.

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் பணியாளர்கள் மற்றும் குழுக்கள் எந்தவொரு தேவையற்ற வணிக, நிதி மற்றும் பிற அழுத்தங்களிலிருந்தும் விடுபட்டு, பாரபட்சமற்ற தன்மையை சமரசம் செய்து, ஏதேனும் சாத்தியமான வட்டி முரண்பாடுகளை வெளிப்படுத்தும் வகையில் தங்கள் செயற்பாடுகள் மற்றும் தனித் தன்மையை வெளித் தரப்பு ரீதியாக உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்த வண்ணமுள்ளது. அங்கீகாரம் தொடர்பான முடிவுகள் திறமையான பணியாளர்கள் அல்லது மதிப்பீடுகளை மேற்கொள்பவர்களிடமிருந்து வேறுபட்ட குழுக்களினால் முன்னெடுக்கட்ட வண்ணமுள்ளன.

அங்கீகாரம் மற்றும் அது தொடர்பான செயற்பாடுகளைத் தவிர, அங்கீகாரத் பெற்றுக் கொள்வதற்கென விண்ணப்பிப்பதற்கு விரும்பும் நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகளினது தீர்மானங்களைப் பாதிக்கக்கூடிய விடயங்கள் தொடர்பாக இலங்கையில் தேசிய அங்கீகார அதிகார சபை எனும் பொறுப்பு மிக்க அரச நிறுவனமாக எந்தவொரு ஆலோசனை வழங்கும் செயற்பாடுகளையும் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை மேற்கொள்வதில்லை

## தோலை நோக்கு

உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட, மாற்றத்துக்கு உள்ளாகக் கூடிய மற்றும் நவீன அங்கீகார அமைப்புகளுக்குத் தேசிய பொருளாதாரம் மற்றும் சமூக நல் வாழ்வு அடிப்படையில் பங்களிப்பு செய்தல்

## இலக்கு

உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளுக்கென பொருட்களுக்கும், சேவைகளுக்குமான ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கென, சர்வதேச அங்கீகாரம் கொண்ட தராதர அங்கீகார சேவைகளுக்கு ஊக்கமளித்து அவற்றை வழங்குதல்.

## முக்கிய விடயங்கள்

**S** நேர்மையுடனும், உச்ச கட்ட நீதியின் வழிகாட்டுதலுடனும் சேவையாற்றுதல்.

**L** சகல விடயங்களையும் தொடர்ச்சியாக அறிந்து கொள்ளல்.

**A** பங்குதாரர்களின் தேவைகளை நம்பகமான முறையில் வழங்கவென குழு அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளல்.

**B** சுயாதீனமாகவும், பக்கச் சார்பற்ற முறையிலும் செயற்படுதல்.

## 1.2 இலக்குகள், நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள்

| | உந்துதல் பகுதி | இலக்குகள் | குறிக்கோள்கள் (முக்கிய செயல் திறன் குறிகாட்டிகள்) | உத்திகள் |
|---|---|---|---|---|
| 1. | வெவ்வேறு பங்குதாரர்கள் மத்தியில் அங்கீகாரத்தை ஊக்குவித்தல் | 1. அங்கீகாரம் மற்றும் அதன் நன்மைகள் குறித்து பங்குதாரர்களிடையே விழிப்புணர்வை உருவாக்குங்கள் | 1. கொள்கை உருவாக்குநர்களின் நேரடி சந்திப்பு<br>2. பயிற்சி பட்டறைகள்/வெபினர்கள்<br>3. வெகுசன ஊடகம் / இணைய தளம் / சமூக ஊடகங்களின் பயன்பாடு | 1. அறியப்பட்ட நிறுவனங்கள்/பொது மக்களின் எண்ணிக்கை<br><br>2. புதிய அங்கீகாரத் திட்டங்கள் குறித்து அறியப்பட்ட தொழில்கள்/சிஏபிகளின் எண்ணிக்கை |
| | | 2. NQI க்குள் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் நிலைப்படுத்தல் | 1. முன்மொழியப்பட்ட தேசிய தர கவுன்சிலின் (NQC) கீழ் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை மற்றும் பிற NQI நிறுவனங்களை நிலை நிறுத்துவதில் பரப்புரை செய்தல் | |
| | | 3. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் தரத் தன்மை | 1. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் பிராண்டின் விளம்பரம் நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் | 1. தரத் தன்மை நடவடிக்கைகளின் எண்ணிக்கை |
| 2. | பாரபட்சமற்ற தன்மையை உறுதி செய்யும் போது அங்கீகாரத்தை விரிவுபடுத்துதல் | 1. தற்போதுள்ள அங்கீகார திட்டங்களின் கீழ் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்<br>2. தற்போதுள்ள வாடிக்கையாளர்களிடையே நோக்கங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்<br>3. புதிய அங்கீகார திட்டங்களை அறிமுகப்படுத்துதல் | 1. சந்தை நுண்ணறிவு அமற்றும் வழக்கறிஞர் வலையமைப்பை உருவாக்குதல்<br>2. சந்தை ஊக்குவிப்பு<br>3. தேசிய/சர்வதேச திட்ட உரிமையாளர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் ஈடுபடுதல் | 1. வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையின் சதவீத அதிகரிப்பு<br>2. நோக்கம் நீட்டிப்புகளின் எண்ணிக்கை<br>3. அறிமுகப்படுத்தப்பட்ட புதிய அங்கீகாரத் திட்டங்களின் எண்ணிக்கை |
| 3. | அங்கீகாரத்தில் கட்டுப்பாட்டாளர்களின் செயல் ஈடுபாடு | 1. கட்டுப்பாட்டாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட இணக்க மதிப்பீட்டுச் சேவைகளைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல்<br>2. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை சர்வதேச அங்கீகாரம் பெற்ற அங்கீகார சேவைகளுக்கான ஒழுங்கு முறைகளில் இலங்கை | 1. கட்டுப்பாட்டாளர்களுக்கான நேரடி தனிப் பயனாக்கப்பட்ட உணர் திறன் திட்டங்கள்<br>2. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினது முடிவெடுக்கும் குழுக்களில் கட்டுப்பாட்டாளர்களின் பிரதிநிதித்துவம் | 1. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை வலையமைப்பில் உள்ள ரெகியுலேட்டர்களின் எண்ணிக்கை<br>2. அங்கீகாரம் பெற்ற இணக்க மதிப்பீட்டுச் சேவைகளைப் பயன்படுத்துவதற்காகவுள்ள உறுதியான கட்டுப்பாட்டாளர்களின் எண்ணிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை அங்கீகாரம் பெற்ற சேவைகளைக் குறிப்பிடுவதற்கு ஒழுங்குபடுத்துபவர்களை ஊக்குவித்தல் | 3. மேப்பிங் மற்றும் ரெகியுலேட்டர்களை அவர்களின் ஒழுங்குமுறைகளுக்குத் தொடர்புடைய சாத்தியமான அங்கீகாரத் திட்டங்களுடன் சீரமைத்தல்<br>4.ரெகியுலேட்டர் இணைப்பு திட்டம் | 3. அங்கீகாரம் பெற்ற இணக்க மதிப்பீட்டுச் சேவைகளைக் குறிப்பிடும் வகையில் வழங்கப்பட்ட விதிமுறைகளின் எண்ணிக்கை |
| 4. | பணியாளர்களின் திறன் மேம்பாடு மற்றும் சாதகமான பணிச் சூழலில் சிறப்பு கவனம் செலுத்துவதன் மூலம் நிறுவன ரீதியான திறனை வலுப்படுத்துதல் | 1. அங்கீகாரத்தின் விரிவடையும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கென நிறுவனத்தின் தொழில்நுட்ப திறனை விரிவுபடுத்துதல்<br>2. சாதகமான பணிச் சூழலை உருவாக்குதல் மற்றும் பணியாளர் நலன் திட்டங்களை உருவாக்குதல் | 1. தற்போதுள்ள மனித வளங்களை மேம்படுத்துதல் மற்றும் புதிய பணியாளர்களைப் பெறுதல்<br>2. பொருத்தமான தொழில்நுட்பம், சட்ட, சுற்றுச் சூழல் மற்றும் சமூக மேம்பாடுகளுடன் ஸ்மார்ட் நிறுவன அமைப்பை உருவாக்குதல் | 1. புதிய திறன்கள் ஒன்று சேர்க்கப்பட்டன<br>2. புதிய தொழில்நுட்ப, சட்ட மற்றும் சமூக மேம்பாடுகள் செய்யப்பட்டுள்ளன |
| 5. | நிதி மற்றும் சுற்றுச் சூழல் நிலைத் தன்மையை உறுதி செய்தல் | 1. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையை நிதி ரீதியாக நிலையானதாகவும் நிலா நாட்டுதல் | 1. தற்போதைய அங்கீகார திட்டங்களில் வாடிக்கையாளர் பங்களிப்புத் தளத்தை அதிகரித்தல்<br>2. சந்தை தேவையின் அடிப்படையில் புதிய அங்கீகார திட்டங்களை அறிமுகப்படுத்துதல்<br>3. பயிற்சித் திட்டங்களை ஊக்குவித்தல்<br>4. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை இன் கட்டளையின் வரம்பிற்குள் புதிய வருமானம் ஈட்டும் முயற்சிகளை அடையாளம் காணுதல் | 1. தற்போதைய அங்கீகார திட்டங்களின் மூலம் வருமான சதவீதம் அதிகரிப்பு<br>2. பயிற்சி திட்டங்களின் மூலம் வருமான சதவீதம் அதிகரிப்பு |
| | | 2. சுற்றுச் சூழல் சார்ந்த சிறந்த நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல் | 1. ஆற்றல் - திறன் மேம்பாடு<br>2. காலநிலை நட்பு முயற்சிகள்<br>3. பொருள் பயன்பாட்டு திறன்<br>4. பசுமை அறிக்கை | 1. ஆற்றல் பயன்பாட்டின் சதவீதக் குறைவு<br>2. நிலையான பயன்பாட்டின் சதவீதக் குறைவு<br>3 பசுமை வீட்டு வாயு உமிழ்வின் சதவீதக் குறைவு |
| 6. | செயற்பாடுகளின் நிலைத் தன்மையின் மூலம் தராதர அங்கீகாரத்திற்கான சர்வதேச அங்கீகாரத்தைப் பேணுதல் மற்றும் மேம்படுத்துதல் | 1. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை அங்கீகாரம் பெற்ற CAB களால் வழங்கப்பட்ட இணக்க மதிப்பீட்டு அறிக்கைகளுக்கான சர்வதேச அங்கீகாரத்தை உறுதி செய்தல் | 1. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை அங்கீகாரத்தை ஊக்குவிப்பதில் முகங் கொடுக்க வேண்டியேற்பட்டுள்ள இன்றைய சிக்கல்கள், புதிய தேவைகள் மற்றும் சாத்தியமான தீர்வுகளை அடையாளம் | 1. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை தலையீட்டின் மூலம் தீர்க்கப்பட்ட அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் / அறிக்கைகள் தொடர்பான சிக்கல்களின் எண்ணிக்கை<br>2. புதிய எம்எல்ஏ / எம்ஆர்ஏ க்களுக்கான விண்ணப்பங்கள் முன் வைக்கப்படுதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | காண்பதற்கென தொடர்புடைய நிறுவனங்களுடன் (EDB, வர்த்தகத் துறை, ஏற்றுமதியாளர்கள் சங்கங்கள், அங்கீகாரம் பெற்ற CAB கள், உறுப்பினர் உள்ளூராட்சி நிறுவனங்கள்) வலையமைப்பு<br><br>2. சர்வதேச அங்கீகார நிறுவனங்களின் தொடர்புடைய மன்றங்களில் பிரதி நிதித்துவத்தைக் காட்டுதல், சக மதிப்பீடுகள், பயிற்சிகள் மற்றும் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை அங்கீகாரத்தை மேம்படுத்துதல்.<br><br>3. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபைின் இன்றைய சர்வதேச தராதர அங்கீகார நிலையை மேம்படுத்துதல் | 3. புதிதாக எம்ஆர்ஏ / எம்எல்ஏ அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல்<br>4. பங்கேற்ற கூட்டங்கள் / மன்றங்களின் எண்ணிக்கை |
| | | 2. பிராந்திய மற்றும் உலகலாவிய ரீதியான அங்கீகார மேம்பாட்டு நிகழ்ச்சிகளில் பங்கேற்றல் | 1 சக மதிப்பீட்டில் பங்கேற்றல்<br>2. கூட்டங்களில் / கமிட்டிகளில் பங்கேற்றல்<br>3. பயிற்சித் திட்டங்களின் வளவாளராகப் பங்கேற்றல் | 1. பங்கு மதிப்பீடுகள், கூட்டங்கள், குழுக்களின் எண்ணிக்கை |

## 1.3 இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினது செயற்பாடுகள்

- சர்வதேச மற்றும் தேசியத் தராதரங்களின் பிரகாரம், ஒத்தியல்பு மதிப்பீட்டு அமைப்புக்களின் (CABs) தராதர அங்கீகாரத்தைப் பூர்த்தி செய்தல்

  - ஆய்வு கூடங்களின் பரிசோதனைகள் (ISO/IEC 17025)
  - அளவைகளை நிர்ணயிக்கும் ஆய்வு கூடங்கள் (ISO/IEC 17025)
  - மருத்துவ ஆய்வு கூடங்கள் (ISO 15189)
  - ஒழுங்கு முறைகளுக்கான சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கள் (ISO/IEC 17021)
  - உற்பத்திப் பொருட்களுக்கான சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கள் (ISO/IEC 17065)
  - ஆட்களுக்கான சான்றிதழ் வழங்கும் அமைப்புகள் (ISO/IEC 17024)
  - பசுமை வீட்டு வாயுக்களைச் (GHG) செல்லுபடியாக்குதலுக்கும், சரி பார்த்தலுக்குமான அமைப்புகள் (ISO 14065)
  - கண்காணிப்பு அமைப்புகள் (ISO/IEC 17020)
  - தகைமை மதிப்பீட்டுத் திட்டங்கள் (ISO/IEC 17043) மற்றும்
  - சிறந்த ஆய்வு கூட வழி முறைகள் (GLP)

- தேசியத் தராதரக் கொள்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வழி முறைகளுக்கு ஏற்ற வகையில், தராதர அங்கீகார நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.

- தொடர்புடைய பங்காளித்துவ அமைப்புக்களுக்கென மதிப்பீட்டாளர் பயிற்சித் திட்டங்களையும், விழிப்புணர்ச்சித் திட்டங்களையும், கருத்தரங்குகளையும் நடாத்துதல்.

- ஒத்தியல்பு மதிப்பீடு பற்றிய ஒத்துழைப்பிற்கும், நல்லிணக்கத்திற்குமான தேசிய மன்றமாக செயற்படுதல்.

- தொழில்நுட்ப அறிவை மேம்படச் செய்து விரிவாக்குவதன் மூலம் தராதர அங்கீகார ஒத்தியல்பு நடவடிக்கைகளிலும், தராதர அங்கீகாரத்திலும் உன்னத நிலையை ஏற்படுத்துதல்.

- தராதர அங்கீகாரத்திற்கென தேசிய வழிமுறைகளை மேம்படுத்தப்படுவதற்கு உதவுதல்.

- அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு மற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் பரஸ்பர அங்கீகாரம் சம்பந்தமான உடன்படிக்கைகளில் ஈடுபடுதல்.

- தராதர அங்கீகாரத்தை வழங்குதல், நீடித்தல், குறைத்தல், இடை நிறுத்துதல், மீளப் பெறுதல் என்பனவற்றிற்கென ஒத்தியல்பு மற்றும் கண்காணிப்பு மதிப்பீடுகளை ஒழுங்கமைத்தல், நிர்வகித்தல், நடாத்துதல்.

## 2. ஆளுநர் சபை

சபையினால் நியமிக்கப்பட்ட பதின் மூன்று (13) உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாக கூட்டமைப்புக்கு சபையின் அதிகாரங்களும், செயற்பாடுகளும் கையளிக்கப்பட்டுள்ளன. 2005 ஆம் ஆண்டின் 32 வது இலக்க இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை சட்டத்தின் கீழ் சமாந்தர அமைச்சின் அமைச்சர் தேவையான கொள்கை முடிவுகளை எடுப்பதற்காக ஒவ்வொரு மாதமும் குழுக் கூட்டத்தை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பார்.

31 டிசம்பர் 2021 இல் உள்ளவாரான ஆளும் தரப்பினரினது குழுக் கட்டமைப்பு பின்வருமாறு :

கலாநிதி சம்பத் வஹல - தலைவர்
முதுநிலை விரிவுரையாளர், முகாமைத்துவக் கல்வி பீடம், சபரகமுவா
இலங்கைப் பல்கலைக்கழகம்

திரு ஆர் எம் எஸ் பி எஸ் பண்டார – அங்கத்தவர்
பணிப்பாளர், திறைசேரி செயற்பாடுகள்
பொதுத் திறைசேரியின் பிரதிநிதி

திருமதி சித்திக்கா சேனாரத்ன – அங்கத்தவர்
பணிப்பாளர் நாயகம்
இலங்கைக் கட்டளைகள் நிறுவனம்

திரு எஸ் என் அகுரன் திலக – அங்கத்தவர்
வேலை பார்க்கும் பணிப்பாளர் நாயகம், உதவிப் பணிப்பாளர்
அளவீட்டு அலகுகள், தராதர மற்றும் சேவைகள் திணைக்களம்

திருமதி எம் எம் ஜி கே மீகஹா கொட்டுவ – அங்கத்தவர்
பணிப்பாளர் (தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி)
விஞ்ஞானம் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி

திரு நிரஞ்சன் திசாநாயக்க – அங்கத்தவர்
நாட்டு முகாமையாளர் / உப துணைவர் / இலங்கை வணிக வலாகத்தின்
இறக்குமதி பிரிவு

பேராசிரியர் சரத் கொட்டகம - அங்கத்தவர்
கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற பேராசிரியர்

செல்வி கில்மா தஹனாயக - அங்கத்தவர்
மேலதிக செயலாளர்
வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

திரு ருவன் டி சில்வா – உறுப்பினர்
வணிக மற்றும் கைத்தொழில் இலாகா கூட்டமைப்பின் பிரதிநிதி (FCCI)

# 3. சட்ட ரீதியான குழுக்கள்

## 3.1. கணக்காய்வுக் குழு

கணக்காய்வுக் குழுவில் ஆளும் மன்றத்தைச் சேர்ந்த நிறைவேற்று அதிகாரமற்ற மூன்று அங்கத்தவர்களும், கணக்காய்வாளர் அதிபதியின் பிரதிநிதியும், குழுவின் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி, பிரதிப் பணிப்பாளர் (நிதி மற்றும் நிர்வாகம்) மற்றும் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் உள்ளகக் கணக்காய்வாளர் ஆகியோரும் அழைப்பின் பேரில் பங்குபற்றுவார்கள். ஆளும் மன்றத்தின் திறைசேரியின் பிரதிநிதி குழுவின் தலைவராகப் பணியாற்றுவார்.

குழுவின் முக்கிய கடமை ஆளும் மன்றத்திற்கு சகல விதத்திலும் உதவுவதாகும். உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமாக திட்ட வட்டமான வழி முறை ஒன்றைக் கடைப்பிடித்தல், வெளிவாரி நிதி அறிக்கையிடல், கடப்பாடுகள் சம்பந்தமான பொறுப்புக்களை நிறைவேற்றுதல் என்பனவாகும். கணக்காய்வுக் குழுவிற்கு அறிக்கையிடும் சுயாதீன உள்ளகக் கடப்பாட்டை இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை கொண்டுள்ளது. வெளிவாரி கணக்காய்வு நடவடிக்கைகளின் திறமையைக் கண்காணித்து குழுவிற்கு பரிந்துரைகளை முன் வைக்கும் பொறுப்பையும் குழு கொண்டுள்ளது.

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் 02 குழுக் கூட்டங்களை நடாத்தியுள்ளது. உள்ளகக் கணக்காய்வாளர், கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஆகியோர் சமர்ப்பித்த அறிக்கைகளும், கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் அறிக்கைகளும் ஆளும் மன்றத்தின் கூட்டத்தின் போது பரிசீலனைக்கென சமர்ப்பிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| திரு ஆர் எம் எஸ் பீ எஸ் பண்டார | தலைவர் / மன்றத்தின் அங்கத்தவர் | திறைசேரியின் பிரதி நிதித்துவம் |
| திருமதி எம் எம் ஜி கே மீகஹகொட்டுவ | அங்கத்தவர் / மன்றத்தின் அங்கத்தவர் | விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் பிரதி நிதித்துவம் |
| செல்வி கில்மா தஹநாயக | அங்கத்தவர் / மன்றத்தின் அங்கத்தவர் | வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு |
| திரு நிரஞ்சன் தஹநாயக | அங்கத்தவர் / மன்றத்தின் அங்கத்தவர் | நாட்டு முகாமையாளர், போண்டேர்ரா பிராண்ட்ஸ் |
| செல்வி சந்துணி பெரேரா | பார்வையாளர் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதி நிதித்துவம் |
| திரு பீ ஏ ரோஹன | பார்வையாளர் | சமாந்தர அமைச்சின் தலைமை உள்ளக கணக்காளர் |
| திருமதி சந்திரிகா திலகரத்ன | செயலாளர் | பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி, இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை |
| திருமதி ஹர்ஷ திலகரத்ன | அழைக்கப்பட்டவர் | பதில் கடமையாற்றும் உதவிப் பணிப்பாளர் (நிதி மற்றும் நிர்வாகம்), இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை |
| திருமதி ரீ வனிகசுந்தர | கூட்டுநர் | உள்ளகக் கணக்காய்வாளர், இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை |

# 4. செயற்பாடுகளின் முகாமைத்துவம்

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினது முகாமைத்துவச் செயற்பாடுகள் பணிப்பாளர் / தலைமை நிறைவேற்று அதிகாரியினால் மற்றும் இணைப்பு 01 இல் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு நிறுவன கட்டமைப்பில் காட்டப்பட்டுள்ள படி தொழில் நுட்ப, நிதி மற்றும் நிர்வாக ஊழியர்களின் ஆதரவுடன் சபையின் அனைத்து நிர்வாகச் செயற்பாடுகளையும் முன்னெடுத்தல் பொறுப்பாகக் காணப்படுகின்றது.

## 4.1. மானிட வளங்கள்

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினது மனித வளம் குறைந்த எண்ணிக்கையிலான உள்ளகப் பணியாளர்கள் மற்றும் கல்வித் துறை மற்றும் பல்வேறு தொழில் முறை அமைப்புகளிலிருந்து பெறப்பட்ட மிகப் பெரும் மதிப்பீட்டாளர்களினதும் உள்ளடக்கத் தொகுப்பைக் கொண்டுள்ளது. இணக்க மதிப்பீட்டு அமைப்புகளின் திறனை உறுதி செய்வதில் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை பங்கு வகிக்கின்றது. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் விற்பனை முதல் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியைக் காட்டியது. இது இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினது செயற்பாடுகளில் பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்தியது. எனினும் ஊழியர்களுக்கு நிரப்பிகளுடன் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை அதன் அங்கீகார அமைப்புகளை ஏனைய வெளிநாட்டு அங்கீகார அமைப்புகளுக்கு இணையாக பராமரிக்கக் கூடிய வாய்ப்பைப் பெற்றது. வழக்கமாக, ஒரு புதிய அலுவலர் சுயாதீனமாக வேலை செய்வதற்கு முன்பு சம்பந்தப்பட்ட துறையில் திறமையானவராக மாறுவதற்கு அவர் குறைந்த பட்சம் மூன்று வருடங்கள் அத் துறையில் பணியாற்ற வேண்டியுள்ளது. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை ஊழியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியின் விவரங்கள் இணைப்பு 04 இல் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

## 4.2. இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினது பணிக் குழு



## 5. செயலாற்றுகை சிறப்பமிசங்கள் - 2021

2021 ஆம் ஆண்டில் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை அதன் 16 வருட கால நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தது. மேலும் அதிக எண்ணிக்கையான சம்பந்தப்பட்ட பரிசோதனை மற்றும் தரப்படுத்தல் ஆய்வு கூடங்கள், மருத்துவ ஆய்வு கூடங்கள், சான்றிதழ் வழங்கும் அமைப்புக்கள் என்பனவற்றுக்கு இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை சர்வதேச தரங்களுக்கு அமைய அதன் சேவைகளை வழங்கியது. இந்த தராதர அங்கீகார திட்டங்கள், சர்வதேச கொள்கைகளுக்கு அமையவும், தராதர அங்கீகார அமைப்புக்களுக்கான ISO / IEC 17011 க்கு அமையவும் முகாமைத்துவப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டன

### 5.1. தராதர அங்கீகார சேவைகள்

2021 ஆம் ஆம் ஆண்டு காலப் பகுதியில், இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இணக்க மதிப்பீட்டு அமைப்புகளுக்கு அங்கீகாரம் வழங்கியது.

| அங்கீகார வகுதிகள் | விருத்தி |
|---|---|
| பரிசோதனை ஆய்வு கூடங்கள் | புதிய – 04, நோக்க நீடிப்புகள் - 09 |
| அளவுத் திருத்த ஆய்வு கூடங்கள் | நோக்க நீடிப்புகள் - 04 |
| சான்றிதழ் உடல்கள் - உற்பத்திகள் | புதிய – 02 |
| சான்றிதழ் உடல்கள் - தனிப்பட்ட | புதிய – 01 |
| கண்காணிப்பு உடல்கள் | நோக்க நீடிப்புகள் - 01 |
| மருத்துவ ஆய்வு கூடங்கள் | புதிய – 02 |
| PT சேவை வழங்குநர்கள் | புதிய – 02 |
| GHG சரி பார்ப்பு உடல்கள் | புதிய – 02 |

### 5.2. பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினால் தராதரத் திட்டங்களின் பிரகாரம் வேறுபட்ட தராதர அங்கீகார உடல்கள் மற்றும் கைத்தொழில்கள் தொடர்பாக 17 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும், 669 பயிலுநர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் விபரங்கள் இணைப்பு 05 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 5.3. சர்வதேச நிகழ்வுகளில் பங்கேற்பு

இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை அங்கீகாரத் திட்டங்களுக்கான சர்வதேச அங்கீகாரத்தைப் பேணுவதற்காக, உறுப்புறை அமைப்புகளாக சர்வதேச அங்கீகார அமைப்புகளின் இடைக் கால மற்றும் வருடாந்த கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை பங்களிப்பை வழங்கக் கூடிய மற்றும் அனுசரணை வழங்க வேண்டிய பொறுப்பு காணப்படுகின்றது. அதன்படி, 2021 ஆம் ஆண்டில் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை APAC வருடாந்த கூட்டத் தொடரிலும், IAF மற்றும் ILAC இடைத் தவணை மற்றும் வருடாந்த கூட்டத் தொடர்களிலும் நிகழ் நிலை வழியினூடாக பங்கேற்றது.

செல்வி சந்திரிகா திலகரத்ன, பணிப்பாளர்/தலைமை நிறைவேற்று அதிகாரி, திரு எல். எச். டி. பந்துசோம, தராதர அங்கீகார பிரதிப் பணிப்பாளர், செல்வி சந்தித்த எதிரிவீர - தராதர அங்கீகார பிரதிப் பணிப்பாளர் ஆகியோர் APAC 2021 இன் விழாவில் பங்கேற்றிருந்தனர்.

ILAC மற்றும் IAF இடைக் கால கூட்டுக் கூட்டத் தொடரையும், வருடாந்த கூட்டுக் கூட்டத் தொடரையும் 2021 ஆம் ஆண்டில் இரத்து செய்திருந்தது. அனைத்து குழுக் கூட்டங்களும் நிகழ் நிலை வழியினூடே

நடாத்தப்பட்டதுடன், குறித்த நிகழ் நிலைக் கூட்டங்களில் செல்வி சந்திரிகா திலகரத்ன, பணிப்பாளர்/தலைமை நிறைவேற்று அதிகாரி, திரு எல். எச். டி. பந்துசோம, தராதர அங்கீகார பிரதிப் பணிப்பாளர், செல்வி சந்தித்த எதிரிவீர - தராதர அங்கீகார பிரதிப் பணிப்பாளர் ஆகியோர் பங்கேற்றனர்.

உத்தியோகபூர்வ அதிகாரியாக செல்வி சந்திரிகா திலகரத்ன, பணிப்பாளர்/தலைமை நிறைவேற்று அதிகாரி ஆகியோர் பங்கேற்றனர்.

இதற்கு மேலதிகமாக இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் சக மதிப்பீட்டாளர்களான திரு எல்.எச்.டி.பந்துசோம, செல்வி சந்தித எதிரிவீர, செல்வி மனிஷா விக்கிரமசிங்க மற்றும் செல்வி மிதிலா குணசேகர ஆகியோர் APAC ஆல் ஒழுங்கு செய்யப்பட்ட சக மதிப்பீடுகளில் பங்கேற்றனர். மேலும் கோவிட் தொற்று நோய் காரணமாக இக் கூட்டத் தொடர்கள் நிகழ் நிலை வழியின் ஊடான மதிப்பீடுகளாக நடாத்தப்பட்டன.

# 6. நிதித் தகவல்கள் - 2021

வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் மீள் செலவினமாகக் குறிப்பிடப்பட்ட தொகை ரூபா 75.87 மில்லியன் ஆகும். இதற்கான திறைசேரியின் பங்களிப்பு ரூபா 17.68 மில்லியன் ஆகும். உண்மையான மீள் செலவினம் ரூபா 54.31 மில்லியன் ஆகும். மீள் செலவினம் சம்பந்தமாகக் காணப்பட்ட பற்றாக்குறை பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானத்தின் மூலம் ஈடு செய்யப்படுகின்றது.

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபை ரூபா 49.35 மில்லியனை வருமானமாக ஈட்டியது. வழங்கப்பட்ட தராதர அங்கீகாரச் சேவைகள் மற்றும் பயிற்சித் திட்டங்கள் மூலம் இத் தொகை கிடைக்கப் பெற்றது. மீள் செலவைத் தாண்டிய வருமானம் 90% ஆகும்.

